www.tamilarangam.net

17-3-86

தோழர் தாசுக்கு தண்டனை வழங்க நீங்கள் அத்தனை பெரும் உத்தமர் தானா சொல்லுங்கள்.

அராஜகவாதி ஸ்ரீ சபாரத்தினத்தின் தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கத்தில் இன்று வரை நடந்த காட்டுமிராண்டித்தனமான மறைபடிந்த நிகழ்ச்சிகளில் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்றவற்றில் எம்மால் நிரூபிக்கக்கூடியவற்றை மட்டும் மக்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

*தனி நபரை அழிப்பதன் மூலம் பொதுவிடுதலையை அடைய முடியாது. ஆலாலசுந்தரம், தர்மலிங்கம் போன்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலை.

*தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் கொள்ளை. இந்தக் கொள்ளையை மறைக்க இதை நேரில் கண்ட ஏழாலை வாசியான சின்னவன் என்பவர் அடித்துக்கொலை.

*வரலாற்றுப்பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரக்கோவில் கொள்ளை. மேலும் கோவில் நிர்வாகத்தைச் சேர்ந்த புலவர் என்பவர் அடித்து துன்புறுத்தப்பட்டார். இக்கொள்ளை சிறீலங்கா இராணுவம் என்ற போர்வையில் நடத்தப்பட்டது.

*சுழிபுரம் நரையப்பா கடையும் வீடும் கொள்ளை.

*யாழ்ப்பாணத்தில் ஒரே இரவில் லலிதா நகை மாளிகை, அம்பலவாணர் நகை மாளிகை, மகாலட்சுமி நகை மாளிகை என்ற மூன்று நகை மாளிகைகள் கொள்ளை.

*காரைநகரில் இரண்டு வீடுகள் கொள்ளை. ஒரு வீட்டுக்காரரைத் தாக்கி கிணற்றுக்குள் போடப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. எனினும் கிணற்றுக்குள் தள்ளப்பட்டவர் உயிர் தப்பியுள்ளார்.

*கோண்டாவில் இ.போ.ச பொறியியலாளர் வீட்டில் கொள்ளையிட முற்பட்டபோது அவர் விழித்துக் கொண்டதால் அங்கிருந்து தப்பிஓட்டம்.

*சாவகச்சேரி சின்னத்தம்பி அன் கோ உரிமையாளர் வீட்டில் கொள்ளையடித்ததுடன் அங்கிருந்த பெண்ணுடன் தகாத முறையில் நடந்தனர்.

*"புறவுண் ரோட்டில் உள்ள இலங்கை மின்சார சபைக் காரியாலயத்தில் இருந்த 1½ இலட்சம் ரூபா பெறுமதியான ரான்ஸ்போமர் கொள்ளை. ரான்ஸ்போமரில் இருந்த உலோகப்பொருட்களை பெருமாள் கோவிலில் உள்ள நாடார் ஒருவருக்கு 15,000 ரூபாவிற்கு விற்கப்பட்டது.

*கல்வியங்காடு நீதவான் அமிர்தலிங்கம் வீட்டில் கொள்ளையடித்ததோடு அவரும் கொலை செய்யப்பட்டார்.

*சிறுப்பிட்டி பப்பன் கடையில் கன்டோஸ், இனிப்பு வகை, றேடியோ, பெருந்தொகையுடன பணம் கொள்ளை

*சிறுப்பிட்டியில் டெலோவால் ஒரு பொதுமகன் தாக்கப்பட்டதையடுத்து இதை எதிர்த்து சிறுப்பிட்டி மக்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது வாகனத்தால் மோதியும், இரும்புக்கம்பிகள், தடிகள் போன்றவற்றால் தாக்கியும் உள்ளனர்.

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் எமக்குள்ளே முரண்பாடு ஏற்பட்ட காலத்திலேயே நடைபெற்றது. இச்சம்பவங்களில் ஈடுபடுத்தப்பட்ட தோழர்கள் பலர் பலாத்காரமாகவே ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் பின் உண்மையை உணர்ந்து தெரிவித்த தகவல்களையும் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று விசாரித்த போது எடுத்த தகவல்களையும் கொண்டே இவற்றை நாம் பிரசுரிக்கின்றோம். இதன் மூலம் இவர்கள் மக்களுக்கு என்ன சேவை செய்கின்றார்கள் என்பதை நாம் சொல்லாமலே புரியும்.

(மேற்கண்ட அறிக்கை தாஸ் கோஷ்டியினரால் வெளியிடப்பட்டுள்ளது)

–தாஸின் கொள்கையை
ஏற்கும் போராளிகள்–

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்